# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :25 January 2025
கோட்டை:7 வாயில்:25 ஜனவரி 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr.Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And  Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

### நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

### இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

### முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**அகப்பொருள் மரபுகளின் பொருண்மைகள்**
**தெ.மதுபாலா**

**தற்காலப் பயன்பாட்டில் தன்மை வினைமுற்றுச் சொற்கள்**
**கோ. கோகிலா**

**தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்கள் சிறந்த ஆசிரியர்கள்**
**முனைவர்.வி.சேகர்**

**ஐங்குறுநூற்றில் மருத நில வாழ்வியல் கோட்பாடு**
**கோ. கோகிலா**

**ஐங்குறுநூற்று மருதத்திணையில் "வேட்கைப் பத்து" வெளிப்படுத்தும் செய்திகள்**
**த.கல்பனா**

**சங்க இலக்கிய அகப்பாடல்களில் தோழியின் உளவியல் கூறுகள்**
**கு.கலையரசி**

**ஆற்றுப்படை இலக்கியத்தில் ஐந்திணைசார் உணவுகள்**
**மு.கௌசல்யா**

**சங்க இலக்கியங்களில் சமூக உறவுகள்**
**முனைவர் வெ. நளினி**

**பறம்பு மக்களின் பரந்த வாழ்வியல்**
**வீ. மஞ்சு**

**குறுநில மன்னர்களின் பொருளாதாரநிலை**
**மு. சதீஸ்குமார்**

**கம்பராமாயணம் காட்டும் வாலிவதைப்படலம்**
**மு.கனகவள்ளி**

**காப்பியங்களில் மரபுக்கருவிகள்**
**வீ.விஜயலட்சுமி**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

நன்றி

# அகத்தினுள்


**இஸ்லாமிய ஸூஃபித்துவமும் சடங்கு முறைகளும்**
முனைவர் சா.இன்குலாப்

**தேவிபாரதியின் "உயிர்தெழுதலின் சாபம்" சிறுகதையில் பெண்மன நிலைபாடு**
S.Priyadharshini

**விமணியின் குழந்தைச் செல்வம் படைப்பு - ஒரு பார்வை**
முனைவர் கு.புஷ்பாவதி

**அண்ணாவின் நாடகப் பனுவல்கள் மற்றும் நிகழ்த்துகைகளில் அவரது மறுமலர்ச்சி விடுதலை அரசியல் அரங்கு ஓர் ஆய்வு.**
திரு.கு.ரவிச்சந்திரன்

**பாரதிதாசனின் பெண்ணுலகம்**
கா. கவிதா

**பாரதியார் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்**
நா.ரஹமத் நிஷா

**“தோட்டியின் மகன்” நாவல் காட்டும் துப்புரவு தொழிலாளர்களின் வாழ்வியல் நிலை**
மு. வசந்தி

**நூற்றாண்டு கண்ட எழுத்தாளுமை இராஜம் கிருஷ்ணன்-பெண்ணின் குரலாய்**
முனைவர் ப.விமலா அண்ணாதுரை

**கே.ஆர்.மீராவின் புதினங்களில் வெளிப்படும் பெண்மொழி**
நா.சௌந்தர்யா

**Creating Virtual Platforms to Showcase Undergraduates' Artworks**
1.Yasanthini, G.F



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் அரசன்
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

Lakśana and Lakśya in Music
Srivaramangai Sadagopan

சதாசிவ ப்ரம்மேந்திரரின் இசை உருப்படிகளில் பகவத்கீதையின்
ஸாராம்ஸம்
ச. காயத்ரி தேவி

Importance of Sāhityam and the Influence of the Great composers in the musical compositions
Ms. Janaki Sadagopan

தெலுங்கும் தமிழும் தித்திக்கும் கலைவடிவம் பாகவதமேளா
ஓர் ஆய்வுநோக்கு
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்

தமிழ்நாட்டின் மரபுவழி நிகழ்த்துகலையான தெருக்கூத்து
கலாநிதி. ஷார்மிலளா றஞ்சித்குமார்

திருமந்திரத்தில் காணப்படும் உடல்சார் கருத்துகள் நவீன அறிவியல் பார்வை
பேராசிரியர் முனைவர் சு.ஹரிபிரசாத்



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி


தமிழ்

**நூற்றாண்டு கண்ட எழுத்தாளுமை இராஜம் கிருஷ்ணன்-பெண்ணின் குரலாய்**
*The Author of the Century -Rajam Krishnan Representing Women through her Writings*

**முனைவர் ப.விமலா அண்ணாதுரை,**
**தலைவர்,**
**முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை,**
**செல்லம்மாள் மகளிர் கல்லூரி,**
**கிண்டி,சென்னை -32.**

**ஆய்வுச்சுருக்கம்;**

இந்த நூற்றாண்டின் மகத்தான பெண் ஆளுமைகளுள் ஒருவர் ஏழத்தாளர் ராஜம் கிருஷ்ணன் அவர்கள்.1925 ஆம் ஆண்டு பிறந்த ராஜம் கிருஷ்ணன் அவர்களின் நூற்றாண்டு இது. தமிழகத்தின் நெல்லை மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இவர் மிக இளம் வயதிலேயே திருமண பந்தத்தில் நுழைந்தவர், ஒரு பெரிய கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்தார். அறிவாற்றலும், புதிய விடயங்களைக் கற்றுக்கொள்வதில் உள்ள இயல்பான தேடலும் அவரை வெறுமனே ஒரு குடும்பப் பெண்ணாக, வீட்டுக் கடமைகளோடு மட்டும் முடங்கிவிடாமல், நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளையும் கூர்ந்து கவனிப்பவராகவும், அதிகமான நூல்களைத் தேடி வாசிப்பவராகவும் மாற்றியது. அவருக்குத் தென்னிந்திய மொழிகளும் ஆங்கிலமும் மட்டுமன்றி ரஷ்ய மொழியும் தெரிந்திருந்தன.ராஜம் கிருஷ்ணனின் படைப்புகளை இரண்டு விதமாகப் பார்க்கலாம். முதலாவது, அவரது நாவல்களில் சமூகப் பிரச்சினைகள் என்ற வகையில் உழைக்கும். பாட்டாளி வர்க்கத்தின் அவலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ள விதம். இரண்டாவது, அவரது படைப்புகளில் பெண்களின் பிரச்சினைகளும். அதனடியாக மேலெழும் அவர்களின் குரல்களும் அடையாளப் படுத்தப்பட்டுள்ள விதம்.பெண்ணிய குரலை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

**திறவுச் சொற்கள்:** ராஜம் கிருஷ்ணன்,பெண் ஆளுமை, **காலம்தோறும் பெண்,கரிப்பு மணிகள்,குறிஞ்சித்தேன்**

***Synapsis:***

*One of the great female personalities of this century is Rajam Krishnan. This is the centenary of Rajam Krishnan, who was born in 1925. A native of the Nellai district of Tamil Nadu, she entered into marriage at a very young age and lived in a large joint family. Her intelligence and natural quest for learning new things made her a family woman, not just confined to household duties, but also a keen observer of the political, social and economic conditions of the country and a reader of many books.She knew not only South Indian languages and English but also Russian. Rajam Krishnan's works can be viewed in two ways. First, the way in which the plight of the working class is recorded in her novels as social problems. Second, the way in which the problems of women and their voices that emerge from them are identified in her works. The aim of this article is to examine the female voice in the society.*

*Key Words:Rajam Krishnan,Kaeippu Manioal,great female personality,women and their voices,Kurinjithen.*

**முன்னுரை**

இந்த நூற்றாண்டின் மகத்தான பெண் ஆளுமைகளுள் ஒருவர் ஏழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் அவர்கள்.1925 ஆம் ஆண்டு பிறந்த ராஜம் கிருஷ்ணன் அவர்களின் நூற்றாண்டு இது. தமிழகத்தின் நெல்லை மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இவர் மிக இளம் வயதிலேயே திருமண பந்தத்தில் நுழைந்தவர், ஒரு பெரிய கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்தார். அறிவாற்றலும், புதிய விடயங்களைக் கற்றுக்கொள்வதில் உள்ள இயல்பான தேடலும் அவரை வெறுமனே ஒரு குடும்பப் பெண்ணாக, வீட்டுக் கடமைகளோடு மட்டும் முடங்கிவிடாமல், நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளையும் கூர்ந்து கவனிப்பவராகவும், அதிகமான நூல்களைத் தேடி வாசிப்பவராகவும் மாற்றியது. அவருக்குத் தென்னிந்திய மொழிகளும் ஆங்கிலமும் மட்டுமன்றி ரஷ்ய மொழியும் தெரிந்திருந்தன. மின்சார வாரியத்தில் பணியாற்றிய கணவரின் பணி மாறுதல் காரணமாகப் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று வாழ நேர்ந்தமையும் பல மொழிகளைக் கற்றுக்கொள்வதில் அவருக்கு இருந்த இயல்பான ஆர்வமும் இதனைச் சாத்தியப்படுத்தி இருக்கலாம்.

பெண்ணியச் சிந்தனைகள் பற்றிய விழிப்புணர்வு அதிகம் பரவலாகாத காலத்திலேயே 'பெண்'களின் உரிமைகள் மற்றும் அவர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் குறித்த ஆழமான புரிதல் கொண்டவராக இருந்தவர் ராஜம் கிருஷ்ணன். அவரது **காலம்தோறும் பெண்', 'காலம்தோறும் பெண்மை'** ஆகிய கட்டுரைத் தொகுப்புகள், சமூகத்தில் பெண்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டதற்கான பின்புலங்களை ஆராய்வதாக அமைந்துள்ளன. அதைத் தொடர்ந்து அவர் எழுதிய **'யாதுமாகி நின்றாய்'** தொகுப்பு பல்வேறு துறைகளில் சாதனை படைத்த பெண்களைப் பட்டியலிடுகிறது.

ராஜம் கிருஷ்ணன் அவர்கள், சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள், வாழ்க்கை வரலாறுகள், மொழிபெயர்ப்புகள். சிறுவர் இலக்கியம் எனப் பல தளங்களிலும் படைப்புகள் பலவற்றைத் தமிழுலகுக்கு அளித்திருந்த போதிலும், ஒரு மிகச் சிறந்த நாவலாசிரியராகவே இன்றளவும் அடையாளம் காணப்படுகின்றார். அதற்கான காரணம், அவர் தான் எழுத நினைக்கும் நாவல்களுக்கான கதைக் களங்களுக்கு நேரில் சென்று, அங்கு வாழும் மக்களோடு கலந்து பழகி, கள ஆய்வின் அடிப்படையில் தனது நாவல்களைப் படைத்தமையாகும். இதன் விளைவாக அந்நாவல்களில் சித்திரிக்கப்படும் கதைமாந்தர்களான, விளிம்புநிலை மக்களின் குரலை ஆழமாகவும் யதார்த்தமாகவும் பதிவுசெய்தவர். அத்துடன் களஆய்வின் அடிப்படையில் புனைவெழுத்துக்களைப் படைத்த தமிழின் முன்னோடிப் பெண் எழுத்தாளராக இவர் போற்றப்படுகின்றார். அந்த வகையில், இவரது எழுத்துக்கள் சமூக வரலாற்று ஆவணமாகவும் திகழ்கின்றன எனலாம்.

நாவல் எழுதுவதைப் பற்றி ராஜம் கிருஷ்ணன் அவர்கள் ***அலைவாய்க்கரை'** எனும் தன்னுடைய நாவலின் முன்னுரையில் குறிப்பிடும்போது, **'ஒரு நாவல் என்பது நான்கு சுவர்களுக்குள் அமர்ந்து வெறும் கற்பனையில் புனையப்படும் எழுத்துக் கோவைதான் என்பதில் எனக்கு முழுமையான உடன்பாடு கிடையாது. நாவல் புனைகதைதான். ஆனால், மனித வாழ்க்கையின் பல்வேறு பிரச்சனைகளிலும் நிலைகளிலும் 'பிரத்யட்சங்கள்' எனப்படும் உண்மை வடிவங்களைத் தரிசித்த பின்னர் அந்த அனுபவங்கள் எனது இதய வீணையில் மீட்டிவிட்ட சுரங்களைக் கொண்டு நான் இசைக்கப்புகும் புதிய வடிவையே நாவலென்று கருதுகிறேன். இவ்வாறு புதிய புதிய அனுபவங்களை நாடிப் புதிய புதிய களங்களுக்குச் செல்கிறேன்'** என்று வலியுறுத்துகின்றார்.அவரது மேற்படி கருத்தினை, **'யதார்த்தம் என்பது நுணுக்க விபரங்களை**

**மட்டுமன்றி, வகைமாதிரிக்குப் பொருத்தமான பாத்திரங்களை, உண்மைத் தன்மை குன்றாத முறையில் உருவாக்குவதைக் குறிக்கிறது'. ( க. கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், ப. 279)** என்ற ஏங்கல்ஸின் கருத்துடன் ஒப்புநோக்குவது பொருத்தமானது.

ராஜம் கிருஷ்ணனின் படைப்புகளை இரண்டு விதமாகப் பார்க்கலாம். முதலாவது, அவரது நாவல்களில் சமூகப் பிரச்சினைகள் என்ற வகையில் உழைக்கும். பாட்டாளி வர்க்கத்தின் அவலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ள விதம். இரண்டாவது, அவரது படைப்புகளில் பெண்களின் பிரச்சினைகளும். அதனடியாக மேலெழும் அவர்களின் குரல்களும் அடையாளப் படுத்தப்பட்டுள்ள விதம்.பெண்ணிய குரலை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

**உழைக்கும் வர்க்கத்தின் குரலாய்..**

ராஜம் கிருஷ்ணன் அவர்கள் கதைக்களத்திற்கே நேரடியாகச் சென்று குறித்த சமூகத்தினரோடு ஊடாடி அவர்களின் பிரச்சினைகளைப் பற்றிப் புரிந்துகொண்டு தமது நாவல்களை எழுதியவர். அக்காரணத்தால், அவற்றில் குறித்த சமூகங்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகள், அவர்களினதே வட்டார் மொழியிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில், சிவகாசிப் பிரதேசத்தில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் குழந்தைத் தொழிலாளர்களின் அவலங்களை நெஞ்சை உருக்கும்.வகையில் சொல்லும் **'கூட்டுக் குஞ்சுகள்',** தஞ்சை மாவட்ட விவசாயிகளின் வாழ்வியல் போராட்டங்களைப் பதிவுசெய்யும் **சேற்றில் மனிதர்கள்'**, நீலகிரி மலைப் பிரதேசப் பழங்குடிகளான படுகர்களின் வாழ்வாதாரமாக இருந்த விவசாயப் பயிர்ச்செய்கை காலமாற்றத்தினால் பணப்பயிரான தேயிலைத் தோட்டப் பயிர்ச்செய்கையாக மாற்றமடைகையில் அவர்கள் எதிர்நோக்கும் வாழ்வியல் சவால்களை விளிக்கும் **'குறிஞ்சித்தேன்'**, கோவா- பிரதேசப் பின்புலத்தில் அமைந்த 'வளைக்கரம்', சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளையர்களின் வாழ்வியலை விபரிக்கும் **'முள்ளும் மலர்ந்தது'**. தூத்துக்குடிப் பிரதேச உப்பளத் தொழிலாளர்களின் துன்பியல் வாழ்வை அடிப்படையாகக் கொண்ட **'கரிப்பு மணிகள்'** என்பன அவரது மிக முக்கியமான நாவல்களில் சிலவாகும்.

**ஓங்கி மேலெழும் 'பெண்'ணின் குரலாய்....**

சமூகத்தில் சரிபாதியான பெண்கள் காலங்காலமாக அனுபவித்துவரும் துன்ப துயரங்கள் முடிவில்லாமல் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. பல பெண்கள் தம்மைச் சுற்றி நிகழும் கொடுமைகள், அடக்குமுறைகள், சுரண்டல்கள் பற்றியும் அவற்றுக்கான பின்புலம் பற்றியும் எவ்வித விழிப்புணர்வும் இல்லாதவர்களாகவே வாழ்கின்றனர். சில விழிப்புணர்வு கொண்ட பெண்கள் தம்மைச் சுற்றியுள்ள உலகை நோக்கிக் கேள்விக்கணைகளை எய்த வண்ணம் உள்ளனர் எனலாம்.அவர்களில் ராஜம் கிருஷ்ணன் மிகவும் முக்கியமானவர்.

ராஜம் கிருஷ்ணனின் முதலாவது நாவல் **பெண் குரல்** கூட்டுக் குடும்ப வாழ்வில் ஒரு பெண் அனுபவிக்கக்கூடிய பிரச்சினைகள், மன அழுத்தங்கள், நெருக்கடிகள் என்பன எத்தகையவை என்பதை இந்நாவல் விவரிக்கின்றது. ஒரு மிகப்பெரிய கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்த அனுபவங்கள் அந்நாவலைப் படைப்பதற்கான உந்துதலை அவருக்குத் தந்திருக்கும் என்பதை நாம் எளிமையாக உணர முடிகிறது. **'வீடு'** என்ற நாவலும் அவரது சொந்த வாழ்வனுபவங்களைப் பேசும் மற்றொரு படைப்பாகும். ஆக கூட்டுக் குடும்ப வாழ்வின் நெருக்கடிகளுக்குள் மூழ்கி காணாமல் போய்விடாமல், அதிலிருந்து மீள்வதற்கும், தனது அனுபவங்களை எழுத்தாக வடிப்பதன் ஊடாக, கூட்டுக் குடும்ப வாழ்வில் பெண்கள்

எதிர்கொள்ளும் மன அழுத்தங்கள் குறித்த விழிப்புணர்வைச் சமூகத்துக்கு வழங்கும் வகையில் அவரது எழுத்துக்கள் அமைந்தன எனலாம்.

பெண் சிசுக்கொலை;

**“ஆண் குழந்தைப் பிறந்தால் அள்ளி பாலும்**
**பெண் குழந்தைப் பிறந்தால் கள்ளிப் பாலும்**
**கொடுப்பது நியாயமா**

என்ற வரிகளுக்கு ஏற்ப உசிலம்பட்டிப் பிரதேசத்தில் நிலவிவந்த பெண் சிசுக் கொலைகளின் குரூரத்தை வெளிக்காட்டி, அதற்கான காரணங்களை ஆராயும் வகையில் அமைந்த அவரது 'மண்ணகத்துப் பூந்துளிகள்' நாவல் இப்பிரச்சினைகளை பற்றி விரிவாகப் பேசுகின்றமை குறிப்பிடத்தக்கது.

"இந்த உலகில் எனக்குத் தெரிந்தவரை எந்த நாட்டிலும் ஒரு பெண்ணை போகத்துக்குரியவள் என்ற வரையறை மறந்து அவளுடைய அறிவுக்காக, குணநலன்களுக்காக, திறமைக்காகச் சந்தர்ப்பங்களைக் கொடுத்து மதிப்பதாகத் தெரியவில்லை. அவளும் முன்னுக்கு வரட்டும் என்று பெண்ணின் பெருமையைப் பற்றிப் பேசுபவர்கள்கூட, 'ஏதோ, பாவம் அவளும் வந்துவிட்டுப் போகட்டும்' என்று தரும இரக்கப் பரிவோடு சொன்னாலும், தங்களுக்குப் போட்டியாக வந்துவிடக்கூடாது என்று முன்னெச்சரிக்கை செய்து கொள்கிறார்கள்' **(ரோஜா இதழ்கள், ப. 210)** என்ற ராஜம் கிருஷ்ணனின் பெண் கதாபாத்திரக் கூற்று மிக முக்கியமானது.

பிறக்கும்போது, ஆண் பெண் இருவருக்கும் பொதுவாகவே சித்தம், அறிவு என்று சொல்லக்கூடிய மலரும் கூறுகள் அமைந்திருக்கின்றன. இருவரும் ஒருவருக்கொருவர் என்றநிலையில், ஒரே சமமான, இருபாதிகளாக இல்லாவிட்டாலும், இருவரும் இணைந்த சேர்க்கையாக முற்றிலும் நிறைவான முழுமையாகப் படைக்கப்பட்டிருக்கின்றனர்' **(காலந்தோறும் பெண், ப.16)** என்று குறிப்பிடும் ராஜம் கிருஷ்ணன், பண்டைய வேதங்களை ஆய்வுக்கு உட்படுத்தி, அவை எவ்வாறு காலப்போக்கில் திரிபுபடுத்தபட்டு, பஞ்சமர்களுக்கும் பெண்களுக்கும் எதிரான கருத்துநிலைகளைக் கொண்டவையாகக் கட்டமைக்கப்பட்டன. என்பதை மிக விரிவாக விவரித்துச் செல்கின்றார்.மேலும், பெண்களுக்கு உபநயனச் சடங்கு மறுக்கப்படாத, அவள் ஆணுக்கு எவ்வகையிலும் குறைத்து மதிப்பிடப்படாத வேதகாலப் பெண்களின் நிலையை ஆதாரம் காட்டி, 'ஒன்றாக நடப்பீர்; ஒன்றாகச் சிந்திப்பீர்; உங்கள் குறிக்கோள்களும் எண்ணங்களும் ஒரே மையத்தில் இணையட்டும். உங்கள் உணவு, பருகும்நீர் எல்லாம் எல்லோருக்கும் உகந்ததாக இருக்கட்டும்' என்ற சமத்துவ நெறியை எதற்காகக் குதறி எறிந்தார்கள்?" **(காலந்தோறும் பெண், ப.68)** என்று கேள்வி எழுப்புவதோடு, தலித்துக்களை விடவும் தாழ்த்தப்பட்ட சமூகமாகப் பெண் சமூகம் உருவாக்கப்பட்டமையின் பின்னால் உள்ள நுண்ணரசியலை மிக வன்மையாக விமர்சனத்துக்கு உட்படுத்துகின்றார். அத்தோடு, தனது ஆய்வுகளின் அடிப்படையில் கண்டறிந்த உண்மைகளைப் பின்புலமாகக் கொண்டு, அவரது சமகாலச் சமூக நிலையையும், குறிப்பாக பெண்களின் நிலையையும் ஒப்புநோக்கி, அவர்தம் துன்பங்களை அடையாளப்படுத்தி, விழிப்புணர்வு ஊட்டும் வகையில் தனது நாவல்களின் பெண் கதாபாத்திரங்களை வடிவமைத்துள்ளார் என்பதும் மிக முக்கியமானது.

'ஒரு பெண், எத்தனை வயதானாலும், என்ன நிலையானாலும், வீட்டுப் பாதுகாப்பைத் தாண்டிவிட்டால், தறிகெட்டுப் பாலுணர்வின் உந்துதலினால் தன்னை மாசுபடுத்திக்கொண்டு விடுவாள் என்ற தீர்மானமான, அருவருக்கத்தக்க கருத்தைக் கல்லாய் நிலைப்படுத்தி இருக்கிறார்கள். எந்த வயதானாலும் கணவன் தவிர்த்து ஒரு பெண் எந்த ஆண் மகனுடனும் பேசவோ, பழகவோ, ஒன்றாக நடக்கவோ நேர்ந்தால், அது தவறானக் கோணத்தில்தான் பார்க்கப்படுகிறது. இந்தப் பார்வை -ஆணைக் கட்டுப்படுத்தாது' **(சுழலில் மிதக்கும் தீபங்கள்,**

**ப. 106)** என்று சமூகத்தில் பெண்களுக்கு எதிராக நிலவும் சமத்துவமற்ற நிலைமையினைக் கேள்விக்குட்படுத்தி விமர்சிக்கின்றார்.

அதேவேளையில், ஒருபெண் அந்த நிலைமையை எதிர்கொள்வது எப்படி என்ற வழிகாட்டுதலையும் அவருடைய எழுத்துக்கள் தரத் தவறவில்லை. அந்தவகையில், கல்வியறிவு, வெளி உலகத்தின் அன்றாடத் தொடர்புகள் இரண்டும் பெண்ணுக்கு நிமிர்ந்து நிற்கும் உறுதியை மட்டும் கொடுக்கவில்லை; கசடுகளை ஒதுக்கிக்கொண்டு முன்னேறும் துணிவையும் கொடுக்கின்றன' **(கோடுகளும் கோலங்களும், ப. 188)** எனும் வரிகளையும், ஒரு இளம்பெண் இயற்கையின் பருவக்காற்றை எதிர்க்காமலும் சாதகமாகச் சென்று படுகுழியில் விழாமலும் சாமர்த்தியமாக வாழ்க்கைப் படகை வலித்துச் செல்லக் கற்பிப்பார்களா?" **(ரோஜா இதழ்கள், ப.103)** எனும் கேள்வியையும் சான்றாகக் குறிப்பிடலாம்.

**அவரது நாவல்களில் வரும் பெண் கதாபாத்திரங்கள். அன்றாடப் போராட்ட வாழ்க்கைச் சுழலில் அடிபட்டுச் செல்லும் சருகுகள் அல்லர். மாறாக, வாழ்வின் சவால்களை எதிர்கொண்டு வெல்லும் ஆலமரங்களை ஒத்தவர்கள். அவருடைய நாவலில் வரும் 'மருதாம்பா வாழ்க்கையின் மேடு பள்ளங்களுக்கு இடையேயுள்ள முரண்பாடுகளைக் கண்டு தளர்ந்துவிட மாட்டாள்... வாழ்க்கை என்பதே பசியோடும் வேறு அடிப்படைத் தேவைகளோடும் உடலுழைப்போடும் ஏற்படும் இடைவிடாத போராட்டம். அதற்காகவேதான் மனித பந்தங்கள்; பொருளாதாரத் தேவைகளின் அடிப்படையிலேயே கிளைக்கும் நெருக்கடிகளும் வாய்ப்புகளும்தான் அவளைப் போன்றோருக்கு வாழ்க்கையின் போக்கையே அமைக்கின்றன. என்று தெரிந்தவள் அவள் (கரிப்பு மணிகள், ப. 20.)**

மருதாம்பாளைப் போன்ற, ஆணின் பாலியல் சுரண்டலை எதிர்த்து நிற்கும் பொன்னாச்சியைப் போன்ற, தொழிலாளருக்கு எதிரான அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்து எழும் செங்கமலத்தாச்சியைப் போன்ற, சமூக நலஞ் சார்ந்து களப்பணியாற்றும் பெண்களுக்கு எடுத்துக்காட்டாய்த் திகழும் ஞானம்மா, மைத்ரேயி போன்ற எத்தனையோ பெண் கதாபாத்திரங்களை நாம் ராஜம் கிருஷ்ணனின் கைவண்ணத்தில் தாசிக்க முடிகின்றது. வாழ்க்கைக் களத்தில் வஞ்சிக்கப்பட்டாலும், முடங்கிப்போய் மண்ணோடு மண்ணாக மக்கிப்போய் உழலும் அவலம் தேவையில்லை என்ற நம்பிக்கையுணர்வையும் தற்துணிவையும் பெண்களுக்கு வழங்கும் வலிமை வாய்ந்த கதாபாத்திரங்கள், அவை.

**முடிவுரை**

ராஜம் கிருஷ்ணனின் எழுத்துக்கள் பாட்டாளி வர்க்கத்தின் துயரங்களைப் பதிவுசெய்யும் ஆவணங்களாகத் திகழ்கின்றன. அவ்வாறே, அவரது நூல்களில் இடம்பெறும் பெண் சார்ந்த கருத்துநிலைகளில் ***Simon De Beauvior*** எனும் பிரெஞ்சுப் பெண்ணியலாளரின் கருத்துக்களோடு ஒத்த தன்மையினை நாம் தரிசிக்க முடிகின்றது.

ராஜம் கிருஷ்ணன் தனது மண்ணுக்கு உரிய மரபுகளை, வேதங்களை, புராணங்களை ஆழமான ஆய்வுக்கு உட்படுத்தி, பெண்ணின் தோற்றகால நிலையையும் பின்னர் தோன்றிய அடிமை நிலையினையும் பற்றி ஆழமாக விவரித்துச் செல்கின்றார். உலகெங்கிலும் பெண்ணின் பிரச்சினைகள் பெரிதும் ஒத்தவையாகவே இருக்கின்றன என் பதை தமது எழுத்துக்களின் மூலம் பதிவு செய்தவர்.

**ஆய்விற்குப் பயன்பட்ட நூல்கள்:**

1. கைலாசபதி, க. (1968) தமிழ் நாவல் இலக்கியம், சென்னை: ஜீவோதய அச்சகம்,
2. ராஜம் கிருஷ்ணன், (1973) ரோஜா இதழ்கள், சென்னை: தாகம்
3. ராஜம் கிருஷ்ணன்,(1979) கரிப்பு மணிகள் சென்னை: தாகம் பதிப்பகம்

4. ராஜம் கிருஷ்ணன்,(1987) சுழலில் மிதக்கும் தீபங்கள். சென்னை. தாகம் பதிப்பகம்
5. ராஜம் கிருஷ்ணன்,(1989) காலந்தோறும் பெண். சென்னை தாகம் பதிப்பகம்
6. ராஜம் கிருஷ்ணன்,1989) காலந்தோறும் பெண், சென்னை: தாகம் பதிப்பகம்
7. ராஜம் கிருஷ்ணன்,(1998) கோடுகளும் கோலங்களும், சென்னை: தாகம் பதிப்பகம்

*Books :*

1. *Kailasapathy, K. (1968) Tamil Novel Literature, Chennai: Jeevodaya Press,*
2. *Rajam Krishnan, (1973) Rose Leaves, Chennai: Thagam*
3. *Rajam Krishnan, (1979) Carbide Beads Chennai: Thagam Publishing House*
4. *Rajam Krishnan, (1987) Lamps Floating in the Vortex. Chennai. Thagam Publishing House*
5. *Rajam Krishnan, (1989) A Woman of All Times. Chennai Thagam Publishing House*
6. *Rajam Krishnan, (1989) A Woman of All Times, Chennai: Thagam Publishing House*
7. *Rajam Krishnan, (1998) Lines and Shapes, Chennai: Thagam Publishing House*
8. *Send feedback*
9. *Side panels*
10. *History*
11. *Saved*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com